**மாகாணக் கல்வித்திணைக்களம்**
**வடக்கு மாகாணம்**
**இரண்டாம் தவணைப் பரீட்சை – 2018**

**தரம்: 10** **நேரம்: 3 மணி**

# சைவநெறி

**சுட்டெண்: ......................................**

## பகுதி – I

**மிகவும் பொருத்தமான விடையினைத் தெரிவு செய்க.**

1) செம்மனச் செல்விக்காக கூலியாளாக வந்தவர்
1. சிவபெருமான் 2. பிள்ளையார் 3. முருகன் 4. ஆஞ்சநேயர்

2) அன்பே சிவம் என்று கூறியவர்
1. திருமூலர் 2. யோகர்சுவாமி 3. தாயுமானவர் 4. குமரகுருபரர்

3) 2018ம் ஆண்டின் பெயர்
1. துன்முகி 2. மன்மதம் 3. ஏவிளம்பி 4. விளம்பி

4) சனிபகவான் $7\frac{1}{2}$ வினாடிகள் யாரைப் பீடித்தது
1. விநாயகர் 2. சிவபெருமான் 3. ஆஞ்சநேயர் 4. துவாரபாலகர்

5) வடபாரதத்தில் தீபாவளி எத்தனை நாட்கள் கொண்டாடப்படுகிறது
1. ஐந்து 2. பத்து 3. பதினைந்து 4. மூன்று

6) விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையைக் காட்டுவதற்காக செய்யப்படுவது
1. பசுதரிசனம் 2. பாணிக்கிரகணம் 3. கணையாழி எடுத்தல் 4. பூதாக்கலம்

7) நாகவழிபாட்டிற்கு வித்திட்ட வேதம்
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வம்

8) பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட என்ற பாடலின் பண்
1. தக்கேசி 2. செருத்தி 3. பஞ்சமம் 4. அதர்வனம்

9) பெரியபுராணத்தைப் பாடியவர்
1. கச்சியப்பர் 2. சேக்கிழார் 3. வரதபண்டிதர் 4. சிவபாதசுந்தரனார்

10) திலகவதியாரின் தந்தையார் பெயர்
1. சிவபாதவிருதயர் 2. புகழனார் 3. சம்புபாதாசிரியர் 4. சடையனார்

11) கொடியேற்றம் எத்தொழிலைக் குறிக்கின்றது
1. படைத்தல் 2. காத்தல் 3. அழித்தல் 4. மறைத்தல்

kalvi.lk

12) திருஞானசம்பந்தர் முதலில் பாடிய பாடல்
1. “மந்திரமாவது நீறு ……..” 2. “தளி இளவளரொளி………” 3. “தோடுடைய செவியன்….” 4. “மடையில்வாளை….”

13) திருநாவுக்கரசரை கல்லோடு கட்டி கடலில் போட்டபோது பாடியது
1. “சொற்றுணை வேதியன்…..” 2. “சுண்ணவெண் …….” 3. “சடையாயெனுமால்………” 4. “மாதர்பிறைக் கண்ணி……”

14) இறைவனை பித்தன் என்று பேசியவர்
1. சம்பந்தர் 2. நாவுக்கரசர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

15) மாணிக்கவாசகர் எத்தனை ஆண்டுகள் பூவுலகில் வாழ்ந்தார்
1. 16 2. 18 3. 81 4. 32

16) சித்தாந்த அட்டகத்தைப் பாடியவர்
1. மெய்கண்டதேவர் 2. அருணந்திசிவம் 3. மறைஞானசம்பந்தர் 4. உமாபதிசிவம்

17) திருமந்திரத்தில் உள்ள பாடல்கள்
1. 1000 2. 2000 3. 3000 4. 4000

18) முத்தமிழ் வித்தகர் எனப் போற்றப்பட்டவர்
1.சுவாமிவிபுலானந்தர் 2. விவேகானந்தர் 3. ஆறுமுகநாவலர் 4.சதாவதானி கதிரவேற்பிள்ளை

19) சதசத்து என அழைக்கப்படுவது
1. பதி 2. பசு 3. பாசம் 4. ஆணவம்

20) புறச்சந்தான குரவர்களின் எண்ணிக்கை
1. முப்பத்திரண்டு 2. எட்டு 3. பதினாறு 4. நான்கு

21) திருவாசகத்தைப் பாடியவர்
1. மாணிக்கவாசகர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரர் 4. சம்பந்தர்

22) பிற்கால ஆயுள்வேத வைத்தியத்திற்கு வித்திட்ட வேதம்
1. இருக்கு 2. யசுர் 3. சாமம் 4. அதர்வனம்

23) இருக்கு வேதத்தில் அக்கினிக்கு எத்தனை பாசுரங்கள்
1. 200 2. 300 3. 400 4. 500

24) தீபாவளியுடன் தொடர்புடைய அசுரன்
1. சூரபத்மன் 2. நரகாசுரன் 3. பத்மாசுரன் 4. தாரகாசுரன்

25) ஒழுக்கத்தை போதிக்கும் இடம்
1. கோயில் 2. வீடு 3. பாடசாலை 4. உறவினர் வீடுகள்

26) விண்ணுக்கும் மண்ணுக்கும் நாதன் யார்?
1. விநாயகர் 2. முருகன் 3. வைரவர் 4. வீரபத்திரர்

27) ஆன்மாக்கள் முத்தியடைதலைக் குறித்து நிற்பது
1. கொடியேற்றம் 2. கொடியிறக்கம் 3. தேர்த்திருவிழா 4. தீர்த்தத்திருவிழா

28) அடங்கன் முறை பாடியதில் அடங்காதவர்
1. திருஞானசம்பந்தர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரர் 4. மாணிக்கவாசகர்

29) திருமுறைகளை அருளியோர் தொகை
1. 12 2. 09 3. 27 4. 21

30) ஆலயத்தில் முதல் வணக்கத்திற்குரியவர்
1. சிவபெருமான் 2. முருகன் 3. வீரபத்திரர் 4. விநாயகர்

31) ஆலயவழிபாட்டிற்கு அவசியமானது
1. பூவும் நீரும் 2. பாலும் பழமும் 3. தேனும் சக்கரையும் 4.சமித்துக்கட்டுக்கள்

32) ஆலயத்தில் ஆண்கள் செய்யும் நமஸ்காரம்
1. பஞ்சாங்கம் 2. அங்கபிரதட்சனம் 3. அட்டாங்கம் 4. திரியாங்கம்

33) ஆன்மாக்கள் எத்தனை வகைப்படும்
1. மூன்று 2. ஆறு 3. ஒன்பது 4. இருபத்து நான்கு

34) பட்டகட்டையில் பகற்குருடு போகிறது. இதில் பட்ட கட்டை எனப்படுவது
1. சகடை 2. மஞ்சம் 3. சப்பறம் 4. பல்லக்கு

35) பஞ்சதோத்திரத்தில் நான்காவதாக ஓத வேண்டியது
1. புராணம் 2. தேவாரம் 3. திருவாசகம் 4. திருப்பல்லாண்டு

36) பாண்டிய நாட்டிற்கு குதிரைவாங்கச்சென்ற சமய குரவர்
1. மாணிக்கவாசகர் 2. திருநாவுக்கரசர் 3. சுந்தரர் 4. சம்பந்தர்

37) கோயிலுக்கு சிறப்பையும் அழகையும் கொடுப்பது
1. தூபி 2. சிவாச்சாரியார் 3. கோபுரம் 4. மூலலிங்கம்

38) சிவஞானபோதத்தைப் பாடியவர்
1. உமாபதிசிவம் 2. மறைஞானசம்பந்தர் 3. அருணந்திசிவம் 4. மெய்கண்டதேவர்

39) விநாயகருக்கு விருப்பமான பத்திரம்
1. அறுகம்புல் 2. மோதகம் 3. பூக்கள் 4. இலைகள்

40) சிவாலயதரிசன பலனைத் தருபவர்
1. விநாயகர் 2. சிவபெருமான் 3. சண்டேஸ்வரர் 4. ஆஞ்சநேயர்

(40 x 1 = 40 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

## பகுதி - II

- முதலாம் இரண்டாம் வினா உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

1) **பின்வருவனவற்றுக்கு விடை தருக.**

   i. இறைவனின் இருவகை நிலைகளும் எவை?
   ii. இந்துக்கள் கொண்டாடும் பண்டிகைகள் இரண்டு தருக.
   iii. சைவ விழுமியம் இரண்டு தருக.
   iv. விரதத்திற்கு வழங்கப்படும் மறுபெயர்கள் இரண்டு தருக.
   v. வேதத்தின் மறுபெயர்கள் இரண்டு தருக.
   vi. திருக்கூட்டத்தின் சிறப்புக்கள் இரண்டு தருக.
   vii. உமாபதிசிவாச்சாரியார் செய்த அற்புதம் இரண்டு தருக.
   viii. ஈழத்துச் சித்தர்களில் இருவர் பெயர்களைத் தருக.
   ix. விபுலானந்தரின் தந்தை, தாயின் பெயர் யாது?
   x. ஆலயத்தில் நீர் செய்யக்கூடிய தொண்டுகள் இரண்டு தருக.

(10x2 = 20 புள்ளிகள்)

2) பின்வரும் அருட்பாக்களில் **இரண்டை** வரிக்கிரமமாக எழுதுக. அப்பாடலின் பொழிப்பினைத் தருக.

   i. "பால் நினைந்தூட்டும் ……."
   ii. "மீளா அடிமை உமக்கே ………"
   iii. "நாமார்க்கும் குடியல்லோம் ………"
   iv. "குனித்த புருவமும் ….."

(3+2 = 5x2 =10 புள்ளிகள்)

3) **"வேதமும் ஆகமமும் இறைவன் நூல்களாகும்"**

   i. வேதங்கள் நான்கையும் தருக.
   ii. ஆகமம் கூறும் விடயங்கள் நான்கு தருக.
   iii. இருக்கு வேதத்தில் முக்கியத்துவம் பெறும் கடவுளின் பெயர்கள் மூன்று தருக.

(4+4+2 = 10 புள்ளிகள்)

4) **"நல்ல நால்வர் சொற்படி நாம் நடக்க வேண்டும்"**

   i. சமயகுரவர் நால்வரின் பெயர்களையும், அவர்கள் நின்ற நெறியினையும் தருக.
   ii. புறச்சந்தான குரவர் நால்வரின் பெயர்களைத் தருக.
   iii. சம்பந்தரும் திருநாவுக்கரசரும் இணைந்து ஆற்றிய அற்புதங்கள் எவை.

(4+4+2 = 10 புள்ளிகள்)

5) **"திருமணம் என்பது தெய்வீகமான மணம் என்பது பொருளாகும்"**

   i. விவாகம், கல்யாணம் என்பதன் பொருள் யாது?
   ii. திருமணத்திற்கு முதல் நடக்கும் சடங்குகள் எவை?
   iii. திருமண மேடையில் நடக்கும் சடங்குகள் நான்கு தருக.

(2+4+4 = 10 புள்ளிகள்)

Education கல்வி அධ්‍යාපන

6) **“விரதம் உள்ளத்தை தூய்மைப்படுத்தும்”**

i. விரதம் என்பதற்கு விளக்கம் தருக.
ii. சிவவிரதங்கள் நான்கு தருக.
iii. சனிதோசம் நீங்க யாது செய்யவேண்டும்?

(2+4+4 = 10 புள்ளிகள்)

7) பின்வருவனவற்றுள் **இரண்டிற்கு** சிறுகுறிப்பு எழுதுக

i. கோயிலும் சமயமும்
ii. பஞ்சாங்கம்
iii. வாய்மை
iv. திருமூலர் (5+5 = 10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# 2025

## 1ம் தவணை வகுப்புகள்

**தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களிற்கான தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வகுப்புக்கள் ஆரம்பமாகவுள்ளன.**

**ஆரம்பம் 01.01.2025**

இலங்கையின் எப்பாகத்திலிருந்தும் Zoom app மூலம் எமது வகுப்புகளில் இணைந்து கொள்ள முடியும்.

அனைத்துப் பாடங்களும் ஒரே கல்வி நிறுவனத்தின் கீழ்...

Education கல்வி අධ්‍යාපන Kalvi.lk

Whatsapp
075 287 1457